இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 03 | திகதி : 19.02.2023 | விலை : 50.00

## எல்லா இன மக்களும் நமது நாட்டில் சமத்துவமாக வாழும் நிலை ஏற்பட உழைப்போம்

### தென்பகுதியில் இருந்து வருகை தந்த மதத்தலைவர்கள் உறுதி




தென்பகுதியில் இருந்து வருகை தந்த சாம்சம் மற்றும் தர்ம சக்தி அமைப்புகளைச் சேர்ந்த மதத் தலைவர்கள் வடபகுதி மதத்தலைவர்களுடன் கடந்த 07ம் திகதி ஒரு கலந் துரையாடலில் கலந்து கொண்டு நமது நாட்டில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தார்கள். இக்குழுவினருக்கு வணக்கத்துக்குரிய பேராசிரியர் பள்ளேகந்த ரத்னசார மகாதேவோ தேரோ அவர்கள் தலைமை தாங்கினார்.

வடபகுதியைச் சேர்ந்த மதத்தலைவர்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாகிய காணிப் பிரச்சினைகள், காணாமல் போனோர் பிரச்சினைகள், ராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவை பற்றிப் பிரஸ்தாபித்தார்கள். இவற்றிற்குத் தென்பகுதி மதத்தலைவர்கள் சார்பாக பதில் அளித்து பேசிய வணக்கத்துக்குரிய களுப்பான பியரத்னா தேரோ அவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முதன்முதலாக 13வது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கும் மேலாக தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்றும் உறுதி அளித்தார்.

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் பற்றித் தாங்கள் அரசாங்கத்துக்குத் தெளிவாக எடுத்துரைத்திருப்பதாகவும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைந்திருப்பதாகவும் தெரிவித் தார். அத்துடன் காணாமல் போனோர் பிரச்சினை பற்றித் தாங்கள் மிகவும் கரிசனையோடு ஆராய்ந்து வருவதாகவும் இதற்குரிய தீர்வுகள் விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்வதாகவும் கூறினார்.

இலங்கையில் சமத்துவமும் சமாதானமும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கு இலங்கையில் உள்ள சகல மதத்தலைவர்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியதன் அவசியத்தையும் கடமையையும் அங்கு பிரசன்னமாக இருந்த எல்லா மதத்தலைவர்களும் ஒன்றாக வலியுறுத்தினார்கள். வட மாகாண சர்வமதக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒன்று கூடலுக்கு யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கினார்.

## தும்பளை புனித லூர்து அன்னை வருடாந்தத் திருவிழா



பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள தும்பளை புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

திருவிழாத்திருப்பலியை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார்.

கடந்த 02ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி அங்கு நடைபெற்று வந்த நிலையில் 10ஆம் திகதி நற்கருணை விழாத் திருப்பலி யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இத்திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும் குருக்கள், துறவிகள், இறைமக்களெனப்பலரும் கலந்து அன்னையின் ஆசீரைப் பெற்றுச் சென்றார்கள்.

## திருஅவையின் தலைமைத்துவப் பணியில் பத்தாண்டுகளை நிறைவுசெய்கிறார் திருத்தந்தை




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தையாகத் தலைமைத்துவப் பணியேற்று பத்தாமாண்டு நிறைவு வருகின்ற மார்ச் மாதம் 13 ஆம் திகதி சிறப்பிக்கப்பட உள்ள வேளையில் உலகளவில் திருத்தந்தைக்காக செபிக்க இணையத்தளப் பக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் பத்தாமாண்டு தலைமைத்துவ பணி நிறைவிற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கும் நிலையில் பிப்ரவரி 13 திங்கட்கிழமை இணையவழியில் திருத்தந்தைக்காகச் செபிக்க செவிமடுக்கும் திருஅவை, DIGITAL SYNOD என்னும் இணையவழி ஒருங்கிணைந்த பயணம் வழியாகத் தொடங்கப்பட்டது.

https://www.decimus-annus.org/ வத்திக்கான் இணையத்தளப் பக்கத்தில் திருத்தந்தைக்காக நாம் செபிக்க இருக்கும் அருள் நிறைந்த மரியே வாழ்க என்னும் செபத்தின் எண்ணிக்கையை நாம் வாழும் இடத்தை உலக வரைபடத்தில் மெழுகுதிரிகளால் அலங்கரித்து, நமது உடனிருப்பைத் தெரிவிக்கின்றனர். இதன் வழியாக உலக மக்கள் தங்களது செபங்களைத் திருத்தந்தைக்கு மெழுகுதிரி வடிவங்களாக அர்ப்பணித்து தங்களது நகர், ஊர், நாடு, கண்டம் அனைத்தையும் செப மெழுகுதிரிகளால் அலங்கரிக்கின்றனர்.

பிப்ரவரி 13 திங்கட்கிழமை தொடங்கப்பட்ட இவ்விணையத்தளச் சேவை மார்ச் மாதம் 13 ஆம் தேதி வரை செயற்பாட்டில் இருக்கும் என்றும், இயேசு தனது திருஅவைக்கு வழங்கிய மிகப்பெரிய கொடையான திருத் தந்தைக்காகக் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும் என்று Petrino மறைப்பணி மையம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

## ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை காலமானார்



ஓய்வுநிலைப் பேராயர் பேரருட் கலாநிதி ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 03ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

பேராயராகக் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் 55 ஆண்டுகளாக ஆயராகப் பணியாற்றியுள்ளமை குறிப்படத்தக்கது.

இவர் அனுராதபுர மறைமாவட்டத்தில் ஆயராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பல இறையியல், சமூகவியல் நூல்களையும் எழுதியுள்ளார். ஆயரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற மன்றாடுவோம்.

## "வெந்து தணிந்தது காடு" திரைப்படத் திறனாய்வு

திரு. மதிசுதா அவர்களின் இயக்கத்தில் உருவான ஈழத்தின் படைப்பான "வெந்து தணிந்தது காடு" திரைப்பட சிறப்புக்காட்சியும் அது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வும் கடந்த 8ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் நடைபெற்றது. ஊடக மைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 20ற்கும் அதிகமான அருட்தந்தையர்கள் கலந்து இத்திரைப்படத்தைப் பார்வையிட்டுத் திரைப்படம் தொடர்பான கலந்துரையாடலில் பங்குகொண்டனர். இந்நிகழ்வில் திரைப்பட இயக்குநர் திரு. மதிசுதா அவர்களும் கலந்துகொண்டதுடன் பார்வையாளர்களின் பாராட்டினையும் பெற்றுக்கொண்டார்.



ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## மீண்டும் ஒரு தவக்காலம்....

மீண்டும் ஒரு தவக்காலம் ஆரம்பமாகிவிட்டது. அர்த்தம் தெரிந்தோ அல்லது அர்த்தம் தெரியாமலோ வந்து போகும் காலங்களும், விழாக்களும், பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் எமது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்ட நிகழ்வுகளாக அமைந்து விடுகின்றன. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் பிறப்பு என்பன எம் வாழ்வின் பிரதான விசுவாச அடித்தளங்களாக அமைந்து விடுகின்றன. ஆனால் அந்த அடித்தளங்கள் ஈடாட்டம் காணும் போது தான் இவையெல்லாம் எதற்கு என்ற ஒரு கேள்வி பிறக்கின்றது.

வறண்டு போன நிலங்கள் எல்லாம் நதிகளைப் பார்த்து ஆறுதலடைகின்றன. ஆனால் அந்த நதிகளே வறண்டு போனால் என்ன செய்வது? இப்படித் தான் இன்று எமது வாழ்வு குறிப்பாக கிறிஸ்தவர்களின் விசுவாசத்துடன் கூடிய இறை வாழ்வு மெல்ல மெல்ல அஸ்தமனத்தை நோக்கி நகர்வதை காணக் கூடியதாக உள்ளது. இதற்குப் பல்வேறுபட்ட காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். காரணங்கள் ஒரு புறம் இருக்கட்டும் தவறுகள் திருத்தப்பட வேண்டியவை; திருந்தப்பட வேண்டியவை; நியாயப்படுத்தப்பட வேண்டியவை அல்ல.

நெற்றியிலே சாம்பல் பூசித் தவக்காலத்தை ஆரம்பித்த நாங்கள் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்து பல ஒறுத்தல்களைச் செய்து மாமிசம் தவிர்த்து, மதுபானம் தவிர்த்து, கேளிக்கைகளில் ஈடுபடாது வாழ வேண்டுமென சொல்லளவிலே பல திட்டங்களை தீட்டி விடுகின்றோம். தவக்கால யாத்திரைத் தலங்களுக்கும், புனித நகர் பயணங்களுக்கும் எம்மைத் தயார்படுத்தி வருகின்றோம். இத்தனைக்கும் மத்தியில் ஈஸ்டர் கொண்டாடுவதற்கு ஆட்டுக் கிடாய் வளர்க்கவும் தலைப்பட்டு வருகின்றோம். இவை நடைமுறைப் படுத்தப்பட்டாலோ அல்லது நடைமுறைப்படுத்தப்பட விட்டாலோ மனத்தளவிலும் செற்பாட்டு ரீதியிலும் எந்தளவு தூரம் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் தவக்காலத்திற்கு அர்த்தம் தருகின்றது என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். தவக்காலத்தில் நோன்பு செபம், தர்மம் ஆகிய புண்ணியங்களில் ஈடுபட்டு அதனை பயனுள்ளதாக்க வேண்டும் எனத் திருத்தந்தை அவர்கள் தனது தவக்காலச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு விடயமும் வாழ்வாக்கப்பட்டாலே தவிர அதனால் எந்தவித பயனும் நாம் அடையப்போவதில்லை. இன்று நாம் சொல்லளவில் மாத்திரம் வாழ்ந்து விட்டுப்போக எத்தனிக்கின்றோம். அவர்கள் "சொல்வார்கள் ஆனால் செய்ய மாட்டார்கள்" எனக் கிறிஸ்து கூறினார். மகாகவி பாரதியாரும் "வாய்சொல்லில் வீரரடி" என இதைத்தான் குறிப்பிட்டார். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத இறை விசுவாசம் அர்த்தமற்றது என்பதை விட போலியானது என்பதை விட ஆபத்தானது என்பதே சாலப்பொருந்தும். **"செயலற்ற விசுவாசம் பயனற்றது"** என புனித பவுலும் கூறுகின்றார்.

பாடசாலையில் அதிபர் ஒருவர் காலைக்கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களைப் பார்த்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நற்செயலைச் செய்து விட்டு தன்னிடம் வந்து சொல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இன்று அப்படி யாராவது நற்செயல் ஏதேனும் செய்திருக்கின்றீர்களா? என்று கேட்ட போது மாணவன் ஒருவன் தான் அன்று காலை நற்செயல் செய்ததாக கூறினான். அதிபர் என்ன என்று கேட்டார். வயது போன காயப்பட்ட முதியவர் ஒருவரை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டுப் பாடசாலைக்கு வந்ததாகக் கூறினான். அவனை முன்னே அழைத்து மேடையில் ஏற்றிப் பாராட்டிய அதிபர் அந்த முதியவருக்கு என்ன நடந்தது என்று கேட்டார். மாணவன் அதற்கு "நான் தெருவில் இருந்த கல்லை எடுத்து மாங்காய் மரத்திற்கு எறிந்தேன் அது முதியவரின் தலை மீது விழுந்து விட்டது" என்றான். மாணவனை மேலும் கீழும் பார்ப்பதைத் தவிர அதிபருக்கு வேறு என்ன செய்வது என்று தெரியவில்லை. இப்படித்தான் இன்றைய எமது தவக்காலமும், கடைப்பிடிக்கும் நோன்புகளும், சொல்லும் செபங்களும், சுற்றும் சிலுவைப்பாதைகளும் அமைந்து விடுகின்றமை நிதர்சனமாகும்.

யோவேல் இறைவாக்கினர் "உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக் கொள்ளுங்கள்" (யோவேல் 2:12) எனக் கூறுகின்றார். உங்கள் நோன்புகளையும், பண்டிகைகளையும், ஓய்வு நாளையும் என் உள்ளம் வெறுக்கின்றது. அவைகளை சுமந்து இளைத்துப்போனேன் என ஆண்டவர் அங்கலாய்க்கின்றார். எமது நோன்புகள் எம்மை நற்செயல்களில் ஈடுபடுத்த வேண்டும் - பிறர் மீது எறியப்படும் கற்களாக இருக்கக் கூடாது. எமது நோன்புகள் எம்மை இறை விசுவாசத்தில் தாங்க வேண்டும் - துர்நாற்றம் மிக்க சாக்கடைகளாகத் தேங்கக் கூடாது. எமது நோன்புகள் பிறருக்கு உதவியாக இருக்கவேண்டும் - உபத்திரவமாக மாறக்கூடாது. எமது நோன்புகள் இல்லாமையில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் - இருப்பதிலிருந்து ஒரு துளியை எடுப்பதாக இருக்கக்கூடாது. எருசலேம் தேவாலயத்தில் கைம்பெண் கொடுத்த காணிக்கையை எம் மனக்கண் முன் நிறுத்துவோம்.

தானியேல் 5: 25 இல் "மேனே மேனே தேகேல் பார்சின்" என கூறப்படும் இறை வார்த்தையில் **தேகேல்** என்பது நீர் தராசில் நிறுக்கப்பட்டீர் எடையில் மிகவும் குறைந்துள் ளீர் என்பதாகும். தவக்காலத்தில் நோன்பிருந்து எமது எடைகளைக் குறைப்பது இதன் பொருளாகாது. இறை அன்பில், பிறரன்பில் எடை குறைந்தவர்களாக இருக்கின்றோம் என்பதே இதன் அர்த்தமாகும். தவக்காலம் எமது எடை நடை உடைகளில் வெளிவேட மாற்றங்களை ஏற்படுத்தாது உள்ளார்ந்த ஆன்மீக மாற்றத்தை ஏற்படுத்தும் பயன்மிக்க காலமாக அமையட்டும். கூட்டொருங்கியக்க திரு அவையாகப் பயணிக்க விரும்பும் நாம் அனைவரும் இத்தவக் காலத்தில் உளமாற்றம் காண்போம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா

**10.02.2023** ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாட்கள் ஆரம்பமாகி தினமும் மாலை 4.45 மணிக்குத் திருச்செபமாலையும், நவநாள் வழிபாடுகளும் நடைபெற்றன.

**18.02.2023** ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அன்னையின் திருச்சொரூபத் தேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும் நடைபெற்றது.

**19.02.2023** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

**புனித லூர்து அன்னையின் பரிந்துரை வழியாக இறைவனின் ஆசீர் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.**

**பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.**

# 2023 சாட்டி திருத்தல தவக்கால தியானம் பற்றிய அறிவிப்புக்கள்

கோட்ட மட்டத்தில் இந்தத் தவக்காலத் தியானங்களை ஒழுங்கு செய்வதன் நோக்கம் - கோட்ட முதல்வர்களுக்கு, யாழ் மறைமாவட்ட ஆயரின் திருத்தலமான, சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தல நிகழ்வுகளைத் தெரிவிப்பதாகும். கோட்ட ரீதியில் இறைமக்கள் சமூகமளிக்க முடியாவிட்டால், கோட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பங்குகளைத் தாங்கள் உற்சாகப்படுத்தலாம். இந்தத் தவக்காலத் தியானத்தில், சிலுவைப்பாதை வழிபாடு, ஒப்புரவு திருவருட்சாதனம் வழங்கல், நறக்ருணை வழிபாடு மற்றும், திவ்ய திருப்பலி போன்ற வழிபாடுகள் மற்றும் செபதப முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

| கோட்டம் | திகதி | நேரம் |
|---|---|---|
| தீவகம் | 25. 02. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |
| யாழ்ப்பாணம் | 04. 03. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |
| முல்லைத்தீவு - கிளிநொச்சி | 11. 03. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |
| இளவாலை | 18. 03. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |
| பருத்தித்துறை | 25. 04. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |
| பொது | 01. 04. 2023 | 9:00 காலை - 2:00 மாலை |

நோயாளர்கள் மற்றும் தூரப் பிரதேசங்களில் வாழ்பவர்களுடைய ஆன்மீகத் தேவையின் பொருட்டு இவை பதிவு செய்யப்பட்டு, பின்னர், இணையத்தில் பரப்பப்படும். உணவு, தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தூரத்தையும், நடைமுறைச் சிக்கல்களையும் கருத்திற்கொண்டே, முல்லைத்தீவு மறைக் கோட்டத்திற்கும், கிளிநொச்சி மறைக்கோட்டத்திற்கும் பொதுவான நாள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாளை நீங்கள் பயன்படுத்த முடியவில்லை என்றால், தயவு செய்து எங்களுக்கு அறிவியுங்கள், அதனை நாங்கள் சில பங்குகளோடு பகிர்ந்து கொள்ளலாம்.

**குறிப்பு:** அனைவருக்கும் இலவசமாக அன்னதானம் வழங்கப்படும். விரும்பியவர்கள் காணிக்கை செலுத்தலாம்.

**ஒரு சில அறிவுறுத்தல்கள்:**

**அ.** இந்தநாட்கள்தவக்காலபரித்தியாகநாட்கள்என்பதால், சிரமங்கள், நேரச்சிக்கல்களைதவக்காலஒறுத்தலாக கையாளுமாறு உங்கள் பங்கு மக்களுக்கு அறிவிக்குமாறு உரிமையோடு கேட்கின்றோம்.

**ஆ.** விலைமதிப்புள்ள பொருட்களைக் கொண்டுவரவேண்டாம் என்று அறிவுறுத்துங்கள்.

**இ.** மரியாதையான ஆடைகளை அணிந்துவரச் சொல்லவும். பார்சல் உணவுகளை முழுமையாக தவிர்க்கச் சொல்லுங்கள். ஒரே உணவை இக்காலத்தில் பகிர்வோம்.

**ஈ.** பாடகர்குழாம், வழிபாட்டுக்குழிவினர் வருவதாகஇருந்தால், வழிபாடுகளுக்கு உதவிசெய்யச்சொல்லுங்கள்.

**உ.** நீர் மற்றும், இயற்கை உபாதை அறைகளை (மலசல கூடங்கள்) சுத்தமாகக் கையாளச் சொல்லுங்கள்.

**ஊ.** தயவு செய்து மறவாமல் இந்தச் செய்தியை உங்கள் பங்குத் தந்தையருக்குத் தெரிவிக்கவும். உங்கள் ஆலோசனைகளையும் தெரிவிக்கவும்.

**மேலதிக தகவல்களுக்குத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.**

(பங்குத் தந்தை, அருட்தந்தை மிக்கேல் ஜெகன்குமார் கூஞ்சு.075 914 8166: 076 262 3434

செயலாளர் - திருமதி வினோபா றதீஸ் 0770553751: பொருளாளர் திரு செரோன் நிலோஜன் 077 631 0335)


# கல்வாரிப் பூங்கா வவுனிக்குளம் தவக்கால யாத்திரை

தவக்காலத்தில் சனி, ஞாயிறு தினங்களில் தவக்கால யாத்திரிகர்களுக்காக காலை 9.00 மணிக்கு சிலுவைப்பாதையும், தொடர்ந்து 12.00 மணிக்குத் திருப்பலியும் நடைபெறும்.

யாத்திரை மேற்கொள்வோர் தமக்குரிய உணவு வகைகளை எடுத்து வர அறிவுறுத்தப்படுகின்றனர்.

**அருட்பணி நேசன்குலாஸ்**
**பரிபாலகர், கல்வாரிப் பூங்கா**
**வவுனிக்குளம்**

# நாரந்தனைப் பங்கில் ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை



நாரந்தனைப் பங்கில் உள்ள மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாக மூன்று நாள் ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

இதில் ஆங்கில வாசிப்பு, உச்சரிப்பு, ஆங்கில உரையாடல், ஆங்கிலப் பாடல் போன்ற பயிற்சிகள் மாணவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் கற்பிக்கப்பட்டன.

இப் பயிற்சிப் பட்டறையானது அருட்பணி எஸ். அஜந்தன் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில், அருட் சகோதரிடிலோசியாமரியதாஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இப்பயிற்சியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாண வர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து பயன் பெற்றார்கள்.

# உடுப்புக்குளம் குழந்தை இயேசு ஆலய வருடாந்த திருவிழா

அளம்பில், உடுப்புக்குளம் குழந்தை இயேசு ஆலய வருடாந்தத் திருவிழா 05ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருவிழாத் திருப்பலியை இயேசு சபையைச் சேர்ந்த முல்லைத்தீவு லொயலா வளாக முதல்வர் அருட்தந்தை யேம்ஸ் சுரேஸ் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தர்.

# காவலன் கலசம்




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(கண்ணன், கொழும்பு)*

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்கவிருக்கின்றது? போட்டியிடுகின்ற கட்சிகளின், சுயேட்சைக் குழுக்களின் சுலோகங்களைப் பார்த்தால் சொர்க்கத்தைப் பெற்றுத் தருபவர்கள் போலத் தோன்றுகின்றது! உண்மையான, மக்கள் சேவையாளர்களை எவ்வாறு இனம் காணலாம்?**

**ப:** கண்ணன், 'முசல் பிடிக்கிற நாய மூஞ்சில பார்த்தால் தெரியும்' (முயல் பிடிக்கின்ற நாயின் முகத்தைப் பார்த்தால் தெரியும்) என்று எங்கட ஆச்சி சொல்லுறவ! போட்டியாளர்களின் முகங்களைப் பாருங்கள். அவர்களின் செயல்களை நோக்குங்கள். அதன்பின் வாக்குகளை அளியுங்கள்.

*(சுரேஸ், யாழ்ப்பாணம்)*

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிற்பவர்கள் அரசியல் தீர்வுத் திட்டங்கள் பற்றியெல்லாம் பேசுகின்றார்கள்! இவர்களின் கருத்துக்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

**ப:** சோக்கான கேள்வி சுரேஸ்! இவர்களின் கருத்துக்களைப் பற்றிய என் கருத்துக்களை மட்டுமல்ல, இவர்களைப் பற்றிய கருத்துக்களையும் வேண்டுமென்றால் கூறுவேன்! முதலில், உள்ளூராட்சி சபைகளில் தெரிவுசெய்யப்படுகின்றவர்கள் பின்வரும் செயற்பாடுகளைத்தான் செய்யமுடியும் அவை: 1.பொதுச்சுகாதாரம் 2.திண்மக் கழிவகற்றல் 3.பாதைகளை அமைத்தல், பராமரித்தல் 4.வடிகால்களை அமைத்தல் 5.தெருக்களுக்கு வெளிச்சம் இடுதல் 6.சிறுவர் பூங்காக்களை உருவாக்குதல், பராமரித்தல் 7.விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் 8.துயிலும் இல்லம் (சேமக் காலைகள்), சுடுகாடுகளை உருவாக்குதல், பராமரித்தல் 9.நூலக வசதிகளை ஏற்படுத்தல் 10.பொது மலசல கூடங்களை அமைத்தல், பராமரித்தல் 11.கிராமிய நீர் விநியோகம் 12.பொது நீராடல் நிலையங்களை அமைத்தல் 13.தீயணைப்புச் சேவைகள் 14.தாய்சேய் நலப்பணி 15.பிரதேசத்தை அழகுபடுத்தல், சுத்தம் செய்தல் 16.பொதுக் கட்டடங்களை நிர்மாணித்தல், பராமரித்தல் 17.தொற்றுநோய் தடுத்தல் 18.திடீர் அனர்த்த முன்னாயத்தமும்செயற்பாடுகளும் 19.அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனம்கண்டு நடைமுறைப்படுத்தல் 20.கால்நடைப் பண்ணைகளை நடத்துதல் 21.வறியோர்க்கு நிவாரணம் வழங்கல் போன்றவையாகும். இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதே உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு தெரிவுசெய்யப்படுகின்றவர்கள் செய்யவேண்டிய பணிகளாகும். இவற்றை விட்டுவிட்டு, அரசியல் தீர்வுத் திட்டங்களை உள்ளூராட்சிச்சபைப்போட்டிகளில் நின்று கதைப்பவர்கள் மட்டில் கொஞ்சம் கவனமாய் இருக்கவேண்டும்! காரணம், இவர்கள் தம்முடைய பிரதேசங்களைக் கவனிக்காமல் கிராமங்களை, நகரங்களை அபிவிருத்தி செய்யாமல் அரசியல்தீர்வுத்திட்டத்தைப்பற்றிச்பேசிப்பேசியே மக்களைப் பித்துப்பிடிக்கச் செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட திறமைசாலிகள் பலர் வரப்போகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில்குதித்திருக்கின்றார்கள். ஆகவே, மக்கள்தான் இவர்களை இனம்கண்டு ஒதுக்க வேண்டியவர்களை ஒதுக்கி, 'ஓட்டு'ப் போட வேண்டியவர்களுக்கு 'ஓட்டு'ப் போட வேண்டும். இல்லையென்றால், மக்கள்தான்வேள்விக் கிடாய்களாய் ஆகிப்போவார்கள்.

*(மதி, யாழ்ப்பாணம்)*

**கே: மகிழ்ச்சியாய் இருக்க வழி சொல்லுங்களேன்?**

**ப:** மதி, மகிழ்ச்சியை அடிப்படையில் இரு வழிகளில் அனுபவிக்கலாம் என்கின்றார்கள். ஒன்று, நாமிருக்கும்அல்லதுவாழும் சூழ்நிலையை மாற்றுவது. இரண்டு, நாமிருக்கும் அல்லது வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப நம்மை நமது மனநிலையை மாற்றிக் கொள்வது. உதாரணமாக மதி, உங்கள் மாமியாரின் இருத்தல் உங்களுக்குப் பிரச்சினையாக இருக்கின்றது என்றால் நீங்கள் வாழும் சூழலை மாற்றுவதன் ஊடாக நீங்கள் தேடும் நிம்மதி ஓரளவுக்குச் சாத்தியமாகலாம்! ஆனால், அப்படி உங்கள் சூழலை மாற்றுவது அநேகமாகச் சாத்தியமற்றுப் போகலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில், உங்கள் மாமியாரைப் பற்றிய உங்கள் மனநிலையைக் கொஞ்சம் மாற்றிக்கொள்வதன் வழியாக மாற்றத்தை ஏற்படுத்தலாம்! எப்படி என்றால், 'இந்தக் கட்டை என்னத்தச் செய்தாலும், கொஞ்ச நாளில் போகிற கட்டைதானே! அதுவரை வெட்டி ஓடுவம்' என்ற உங்கள் மனநிலையில்மாற்றத்தைஏற்படுத்துவதன்வழியாகக் கொஞ்சம் ஆற்றிக்கொள்ளலாம்! எப்படியிருக்கின்றது மதி?

*(சூசையப்பு, யாழ்ப்பாணம்)*

**கே: நடக்கப்போகின்ற 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

**ப:** சூசையப்பு, பிரதேச அபிவிருத்திப் பணிகள் பல உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவே நிறைவேற்றப்படுகின்றன. அதனால், இவ்வுள்ளூராட்சி மன்றத் தேர்தலும் மிக முக்கியமானதே. ஒருமுறை, கொஞ்சம் கஸ்ரப்பட்ட மக்கள் வாழும் ஓரிடத்தில் அவர்களின் வீடுகளுக்குச் சரியாகக் கூரை அமைக்கப்படாததால் மழைகாலத்தில் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தார்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தேர்தலின் நின்ற ஒருவர் கொஞ்சத் தகரங்களைக் கொடுத்து, 'வீட்டுக்குப் போடுங்கோ' என்று சொல்லிச் சென்றார். தேர்தல் நாளும் வந்தது. தகரங்களைப் பெற்றுக்கொண்ட அம்மக்கள் தேர்தலில் 'வீடு' அடையாளத்திற்குத் தமது வாக்குகளைத் தாராளமாக வழங்கினார்கள்! ஆனால், தகரங்களைக் கொடுத்தவர் வேறோர்அடையாளத்தில்தான் போட்டியிட்டிருந்தார்! (அவர் கருதியது, தகரத்தை உங்கள் வீட்டுக் கூரைக்குப் போடுங்கள், வாக்குகளை எங்கள் கட்சிக்குத் தாருங்கள் என்பதுதான்!) இச்சம்பவத்தைப்போல, எதிர்காலத்தில் நிறைய நடக்கலாம்! கவனமாகப் பார்த்து, சேவை மனப்பான்மை கொண்ட, மண்ணை - மக்களை, பிரதேச அபிவிருத்தியை உண்மையாகவே நேசிக்கின்ற, பிரதேச அபிவிருத்தியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அவற்றைத் நடைமுறைப்படுத்தக்கூடிய நல்லுள் ளங்களின் பெயர்களுக்கும் அவர்கள் சார்ந்த அடையாளத்திற்கும் புள்ளடி இடுங்கள் என்று நேரடியாகச் சொல்ல மாட்டேன். நீங்களே யோசித்து முடிவு செய்யுங்கள்!

*(சரசு, யாழ்ப்பாணம்)*


**கே: இன்றைய தம்பதிகள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதைக் குறைத்துக் கொண்டு நாய்களோடும் பூனைகளோடும் பொழுதைக் கழிக்கின்றார்கள். இவர்களுக்கான ஆலோசனை என்ன?**

**ப:** சரசு, இவ்விடயத்தில் என்னுடைய சொல்லை யார் கேட்கப்போகின்றார்கள்! அப்படி ஏதாவது கூறினாலும் 'அப்ப, பிள்ளையைவளர்த்துத்தாருங்களேன்!'என்றுதான்விதண்டாவாதம்புரிவார்கள்! ஆகவே, இவ்விடயம் பற்றித் திருந்தந்தையின் சிந்தனையைப் பகிர்கின்றேன். 'எத்தனையோ தம்பதிகள் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விரும்பாமல், ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டு, நாய்களையும் பூனைகளையும் வளர்க்கின்றார்கள். இன்று, குழந்தைகள் வாழவேண்டிய வளரவேண்டிய இடத்தில் நாய்களும் பூனைகளும் வாழ்ந்து வருகின்றன!" என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அவதானிப்பை இன்றைய திருமணத் தம்பதியர் உற்றுநோக்குவது காலத்தின் கட்டாய அழைப்புங்க, சரசு! •

# தவக்காலத்திற்கான அடையாளங்கள்

**ம.சூசைமுத்து**

### 1. சாம்பல்



கடந்த ஆண்டு குருத்து ஞாயிறு நாளில் பயன்படுத்திய ஓலைகளைச் சேகரித்து, சாம்பல் உருவாக்கப்படல். வளம், பசுமை, பளபளப்பு, நறுமணம், கமழ்ந்த தங்க நிற ஓலை இன்று எப்படி மாறிவிட்டது. ஓர் ஆண்டிற்குள் எவ்வளவு மாற்றம் நிகழ்ந்துள்ளது? அதே ஓலைகள் இன்று காய்ந்து விட்டன. காய்ந்த ஓலைகள் கீழேவிழும்போது பசுமையான ஓலை சிரிக்கும் என்பது பழமொழி.இதில் பொதிந்துள்ள உண்மை பெரிது. இதை நாம் யோசிப்பதில்லை. அன்றைய ஓலைகளே இன்றைய சாம்பல். மனிதரின் வாழ்நாள் புல்லைப் போன்றது. ஆண்டவரின் பேரன்போ அவருக்கு அஞ்சுவோர் மீது என்றென்றும் இருக்கும். (தி.பா:103: 15-17) இக்கருத்தை இயேசுவும் மலைப்பொழிவில் (மத் 6:25-34) குறித்துக் காட்டுகிறார். எனவே சாம்பலுக்காகப் பயன்படுத்தப்படும் ஓலை உணர்த்தும் வாழ்வுச் சித்தாந்தம் ஆழமானது. அது நிலையான இறைவனின் நிபந்தனையற்ற அன்பை நினைவுபடுத்துகிறது. நம்மை இறைவன்பால் மீண்டும் ஈர்ப்பதற்கான ஓர் அடையாளமே விபூதி.

**சாம்பலின் உட்பொருட்கள்**

நெற்றியில் திருநீற்றுப்புதன் அன்று பூசப்படும் சாம்பல் உணர்த்தும் உள்ளீடுகள்

**இறைவனிடம் திரும்புதல்**

நிறைவுடன் நம்மை அன்பு செய்த இறைவனிடமிருந்து விலகிச் சென்றதற்கான பரிகாரம் பழைய ஏற்பாட்டில் பல பகுதிகளில் மனத்துயரில் வெளியடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோனா 3:5-9 - யோபு 42:6) வாழ்வின் நன்மை உணர்தல்

மனிதர் மண்ணில் இருந்து தோன்றியவர். மண்ணாகவே வாழ்பவர். மண்ணுக்கே திரும்புவர் (தொ.நூல். 3:19) என்பதை நினைவூட்டவே நெற்றியில் சம்பல் பூசப்படுகிறது.

**இறையாட்சிக்காக அர்ப்பணித்தல்**

எதிர்மறையான நினைவூட்டல் மட்டுமன்று. விபூதி மனமாற்றத்தின் மறுபக்கமாக அமைவதும், நலம் தருகின்ற நற்செய்தியை நம்புதல், ஏற்று வாழ்தல், எடுத்துக்கூறல் இதுவே இயேசுவின் முதல் சொற்களாக முன்வைக்கிறார் நற்செய்தியாளர் (மாற்று 1:16)

**உணவுத் தவிர்ப்பு**

தவக்காலத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் முக்கியமானவை ஒரு சந்தியும் சுத்தபோசனமும். உணவுத் தவிர்ப்பு தவக்காலம் பரிந்துரைக்கும்தவமுயற்சியாகும்.

**உடலின் மேன்மை**

இன்று மருத்துவர்கள் உபவாசம் இருப்பதன் தேவையை உணர்த்துகிறார்கள். உடல் சார்ந்த நலன்களுக்காக ஒருவேளை மற்றும் உணவுத் தவிர்ப்பு பரிந்துரைக்கப்படுகின்றது.

**வறியோர்களுக்கான தியாகம்**

தவ முயற்சிகளால் நாம் மேற்கொள்ளும் கட்டுப்பாட்டில் சேமிப்பவற்றை வறியவர்களுக்குப் பகிரப்படுதல் எமக்கு இறையனுபவமாகிறது. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் (மத்தேயு9:13)

(தொடர்ச்சி 11ம் பக்.)


## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 . 08 . 1946



விண்ணில் 28 . 02 . 2017

### அமரர்
### யோசவ் அலோசியஸ் நவரட்ணம்

ஆண்டு ஆறு நிறைவடைந்தது உம்
பசுமையான நினைவலைகள் எம் உள்ளத்தில்
என்றும் அசைவாடிக் கொண்டிருக்கிறது.
நாம் மறவோம் உம் அன்பை, நீர்
இறைவன் இல்லத்தில் வாழ நித்தம்
வல்ல தேவனை வேண்டுகிறோம்

குடும்பத்தினர்

AD-12

அர்த்தமுள்ள ஆன்மீகம்

# நலம் தரும் நம்பிக்கை

பகுதி 08

**நலம்** தரும் நம்பிக்கையில் இறை நம்பிக்கையானது இறைவன் காட்டுகின்ற வழியிலே நடக்கின்றபோது நன்மைகள் நம்மைத் தொடர்ந்து வரும் என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நன்மை தீமை அனைத்துக்குமே அவரே காரணர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். ஓர் உண்மைச் சம்பவத்தைப் பார்ப்போம். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தலையில் கட்டி என்ற நிலையில் ஒரு குருவானவரிடம் செபிப்பதற்காகப் பெற்றோரால் அழைத்துவரப்பட்டார். குருவானவர் மாணவனின் தலையில் கையை வைக்கச் சொல்லி, தானும் கையை வைத்து, இறைவன் கொடுத்த அந்தக் கட்டிக்காக நன்றி கூறிச் செபித்தார். இதனால் கோபமடைந்த பெற்றோர் கட்டிக்காக நன்றிகூறிச் செபித்ததை எதிர்த்தனர். இறைத் திட்டம் பற்றிய உண்மைகளை எடுத்துக்கூறி அவர்களை வழிக்குக் கொணர்ந்து முன்போலவே செபித்தார் அந்தக் குருவானவர். ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின் மாணவனின் தலையில் இருந்த கட்டி ஆச்சரியமாக இல்லாமல் போனது குறித்து அனைவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

இன்று, நாமும்கூட இறைவனிடமிருந்து நன்மைகளை எதிர்பார்க்கிறோமே தவிர, துன்ப. துயரங்களை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. அந்தத் துன்பங்கள் ஏன் வருகின்றன என்று ஆன்மீக ரீதியாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நாம் இறைவன் மீது வைத்திருக்கிற நம்பிக்கை புடமிடப்படுவதற்காகவே சோதனைகள் நம்மீது அனுமதிக்கப்படுகின்றன. பாவத்தின் தண்டனை கூட நாம் மனந்திரும்பி நம்பிக்கை கொள்வதற்காகவே தவிர, நாம் அழிந்துபோவதற்காக அல்ல. இதை ஆழமாக அறிந்துகொள்ள விவிலியம் கூறும் யோபு என்பவரின் வாழ்க்கையை எடுத்துக்கொள்வோம்.

ஒரு காலத்தில் கடவுளுக்கு ஏற்ற நீதிமானாகவும் உறுதியான நம்பிக்கையாளராகவும் கடவுளுக்கு அஞ்சி நடந்த மிகப் பெரும் செல்வராக யோபு இருந்தார். அவரது நம்பிக்கையைத் தகர்க்க அலகை பல வழிகளை மேற்கொண்டது. அவரது நம்பிக்கையை சோதிக்க இறைவனும் அலகைக்கு அனுமதி கொடுத்தார். இதனால், எவரும் அனுபவிக்காத சொல்லொண்ணா இழப்புக்களையும் துன்பங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக யோபு அனுபவித்தார். மக்களை இழந்தார் சொத்து சுகங்கள் அனைத்தையும் இழந்தார் இறுதியாக, உடல் நலத்தையும் இழந்து, பார்ப்போர் பழிக்கும் நிலைக்கு உள்ளானார். இந்த நிலையிலும் கூட அவர் இறை நம்பிக்கையிலிருந்து விலகவேயில்லை. அவர் தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார். "தலையை மழித்துக்கொண்டார் தரையில் விழுந்து வணங்கி என் தாயின் கருப்பையிலிருந்து பிறந்த மேனியனாய் வந்த நான் பிறந்த மேனியாகவே செல்வேன். ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப் பெறுக" என்றார். இவை அனைத்திலும் யோபு பாவம் செய்யவுமில்லை, கடவுள் மீது குற்றம் சாட்டவுமில்லை. (யோபு1:20,22) சொல்லொண்ணாத் துன்பங்கள் வந்தபோதும் அவற்றை நல்மனத்துடன் ஏற்றுக்கொண்டார்.

யோபுவினுடைய நம்பிக்கையின் ஆழமும் அனைத்தும் அவரே என்ற பற்றுறுதிமிக்க நிலையும் தெளிவாகப் புலப்படுகின்றது. ஓடு ஒன்றை எடுத்துத் தம்மைச் சொறிந்துகொண்டு, சாம்பலில் அவர் உட்கார்ந்திருந்த நிலையில் அவரது மனைவி, இன்னுமா மாசின்மையில் நிலைத்திருக்கிறீர்? கடவுளைப் பழித்து மடிவதுதானே என்றாள். யோபு அவளிடம், அறிவற்றவளே! நன்மையைக் கடவுளிடமிருந்து பெற்ற நாம், ஏன் தீமையைப் பெறக்கூடாது? என்றார். இவை அனைத்திலும் யோபு தம் வாயால் பாவம் செய்யவில்லை. யோபுவின் நண்பர்கள் கூட அவருடன் வாக்குவாதம் செய்து, அவரின் நம்பிக்கைக்கு முள்ளாக நின்றார்கள்.

யோபு நான் ஏன் பிறந்தேன்? என்று துயரப்பட்டாரே தவிர, கடவுள் மீது பழி போடவே இல்லை. அவர்களுடைய வாக்குவாதங்களுக்கு மத்தியிலும், கடவுளின் நீதியிலும் ஞானத்திலும் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். எல்லாம் எதிர்மாறாக நிகழ்ந்தபோதிலும், அனைத்தையும் கடந்தவர் கடவுள் என்ற யோபுவினுடைய நம்பிக்கை ஒரு துளியும் இழக்கப்படவில்லை. துன்பங்களுக்கு ஒரு பொருள் உண்டு என்பதை உணர்ந்து, ஆண்டவரின் அருளாசியைப் பெறுகின்றார்.

யோபுவின் நம்பிக்கையில் தளர்வைக் காணமுடியாத இறைவன் அவர் இழந்தது அனைத்தையும் பல மடங்காகத் திருப்பிக் கொடுத்து ஆசி வழங்குவதை யோபுவினுடைய வாழ்க்கையைப் படித்து உணர்ந்த நாம் நம்பிக்கையில் எவ்வாறு இருக்கிறோம்? யோபு கூறுவதைப் போல் இறைவனிடமிருந்து அவர் தரும் நன்மைகளை அனுபவிக்கிற நாம், துன்பங்கள், நோய், நொடிகளை ஏற்றுக்கொள்கிறோமா? துன்பங்கள், நோய், நொடிகள் வரும் போது, அவற்றையும் மனப்பூர்வமாக அனுபவிக்கின்ற மனோநிலையில் இருக்கின்றோமா? சிறிய துன்பம் வந்தவுடனேயே, கடவுளுக்குக் கண் இல்லை, மூக்கு இல்லை என்று நமது மனங்களைக் குரங்காக்கி, தத்தளித்து, அலைபாய விட்டுவிடுகிறோம். யோபுவைப் போல் இழப்புக்களை இறைவன் செயலெனத் தாங்கி ஏன் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை? எத்தனையோ புனிதர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டபோதும், தோல் உரிக்கப்பட்டபோதும், தீ நடுவே தூக்கி எறியப்பட்டபோதும், ஈட்டிகளால் அம்புகளால் தைக்கப்பட்டபோதும் கூட, நம்பிக்கையில் தளராது இருந்தது நமது காலத்து வரலாறு அல்லவா? இதைவிடவா நாம் அனுபவிக்கப் போகிறோம்? துன்பங்களூடாக நாம் புடமிடப்படுகிறோம். அத்துன்பங்களினூடாக நாம் கொள்ளும் நம்பிக்கைப் பலமே நாம் கைக்கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்பதை உணர்ந்து, துன்ப துயரங்களும் மேன்மை தரும் நம்பிக்கையே என்ற நம்பிக்கையோடு நமது வாழ்வை இறைவனை நோக்கி நகர்த்துவோம். மீண்டும் அடுத்த தொடரில் சந்திக்கும்வரை...

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

**யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்**
**ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.**

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்காலம்)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**மொழி மாற்றம்**

பின்பு 02ஆம் வத்திக்கான் சங்கம் வரைக்கும் தமிழ்மொழி தெரியாத பங்குத் தந்தையர்களுக்கு உதவியாகச் சில இடங்களில் மட்டும் இது வாசிக்கப்பட்டது. பல பங்குத் தந்தையர்கள் தமிழில் நற்செய்தி வாசித்து மறையுரையாற்றக்கூடிய சுதேச குருக்களாக இருந்தாலும் திருப்பலியும் திருவழிபாடுகளும் இலத்தீன் மொழியிலேயே இடம்பெற்றன. பதில்களும் மக்களால் அதே மொழியில் மனப்பாடம் செய்து சொல்லப்பட்டன. எடுத்துக்காட்டாகப் பீடப்பணியாளரின் தகுதி காண்நிலை, இலத்தீன் செபங்களைப் பங்குத்தந்தைக்கு மனப்பாடமாக ஒப்புவித்ததிலேயே தங்கியிருந்தது.

**மொழிமாற்ற ஏடுகளின் பயன்பாடு.**

ஆயரின் இறுதிக்காலத்தில் இந்தியாவில் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட திருப்பலிநூல், திருப்பலி வாசகநூல், திருஇசை நூல் என்பன யாழ். மறைமாவட்டத்தில் பகுதி பகுதியாக அறிமுகப் படுத்தப்பட்டன. 02ஆம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளுக்கேற்பத் திருத்தியமைக்கப்பட்ட, தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட திருவருளடையாளங்களின் பாடங்கள் நடைமுறைக்கு வருவதற்குக் காலம் தேவைப்பட்டது. ஆயினும் பரவலாக இருந்த தேவையை நிறைவு செய்ய இயலாதிருந்த காரணத்தால் யாழ். மறைமாவட்டத்திலும் கூடுதலான அச்சுச் செலவின் மத்தியிலும், பல சிறிய நூல்கள் புனித யோசேப்பு அச்சகத்தில் அச்சிடப்பட்டன. ஆயினும் திருப்பலிக்கான அருட்பணியாளர்களின் பயன்பாட்டு நூல்கள் சிறு சிறு பகுதிகளாகவே முதலில் வெளிவந்தன.ஆயினும் இது சங்கத்திற்கு முன்பு இருந்த இலத்தீன் மூல நூலின் மொழிபெயர்ப்பாகவே இருந்தது. 1969 ஏப்ரல் 03இல் 6ஆம் பவுல் திருத்தந்தை, "உரோமைப் பூசைப் புத்தகம்" என்னும் திருத்தூதுக் கொள்கைத் திருமுகமொன்றை வெளியிட்டார். இத்திருமுகமானது ஏற்கெனவே "உரோமைப் பூசைப் புத்தகத்தின் பொதுப் போதனை" என்னும் மடலின்படி வெளிவந்த இலத்தீன் மொழியில் அமைந்து, ஏனைய சுதேச மொழி பெயர்ப்புகளுக்கு அடிப்படையாக அமைந்த புதிய திருப்பலிப் புத்தக மூலப்பிரதியை அங்கீகரித்து வெளியிடப்பட்ட திருமுகமாகும்.

எனவே 1970 மார்ச் 26, புனித வியாழன் அன்று இறை வழிபாட்டுத் திருச்சங்க அலுவலகம் வெளியிட்ட கட்டளைத் திருமுகத்தில், "இப்பூசைப் புத்தகத்தின் இலத்தீன் பிரதியை இதன் வெளியிட்டு நாளிலிருந்தே பயன்படுத்தலாம். இதை மொழிபெயர்த்து திருத்தூதுப் பீடத்தின் அங்கீகாரம் பெற்று, எந்த நாளிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரலாமெனக் குறிப்பிடுவது அந்தந்த நாட்டு ஆயர் குழுக்களின் பொறுப்பாகும்", என்னும் கூற்றின் படி மேற்படி திகதிக்குப் பின்பே தமிழ்மொழியில் முழுமையான புதிய திருப்பலிப் புத்தகம் நடைமுறைக்கு வந்தது என்பது தெளிவாகின்றது. 02ஆம் வத்திக்கான் சங்கப் பரிந்துரைகளுக்கு முன்பு 5 ஆம் பத்திநாதர் பாப்பரசர் 1570 ஆம் ஆண்டில் வெளியிட்ட இலத்தீன் மொழியில் அமைந்த திருப்பலிப் புத்தகமே இலங்கையிலும் கூட யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிய ஐரோப்பிய மற்றும் தியானசம்பிரதாயசபை மறையறிவிப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டது. 02ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பும் கூட புதிய திருப்பலிப் புத்தகம் 1970இல் நடைமுறையில் வந்தாலும் 1978இலேயே தமிழக ஆயர்கள் எல்லோரும் இணைந்து தமிழில் வெளியிட்டனர்.

மேலும் பாரிய நிதிச்சுமை தரக்கூடிய இத்தமிழ் வெளியீடுகள் இந்தியாவிலிருந்து பெறப்பட்டாலும், திருவழிபாட்டினைஅர்த்தமுள்ளதாக்கும் வகையில் சிறிய செபப்புத்தகங்களும், விளக்கக் குறிப்பேடுகளும் புனித யோசேப்பு கத்தோலிக்க அச்சகத்தினூடாக இங்கு வெளிவந்தன.

1. **எமது பூசைப்புத்தகம் (திவ்விய பூசை ஆராதனையை முழுதாய் அடக்கியது).**
2. **திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்.**
3. **திவ்விய பூசை மகத்துவம்.**
4. **பூசை உதவி மந்திரம்.**
5. **சுவிசேஷ விரித்துரை போன்ற திருப்பலிக்கு உதவியாக நம்பிக்கையாளர்கள் பயன்படுத்தக்கூடிய விளக்க நூல்கள்.**

1. **மோட்சபாதை (நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முதல் வெளியீடு)**
2. **முத்தித் திறவுகோல்**
3. **செபச்செண்டு**
4. **பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள்**
5. **திருமணித்தியாலம்**
6. **நித்திய ஆராதனை**
7. **இரா ஆராதனை முயற்சிகள்**
8. **சிலுவைப்பாதை**

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

போன்ற ஏனைய பக்தி முயற்சிகள் மற்றும் புனிதர்களின் வரலாறு தொடர்பான புத்தகங்களும்,

மேற்சொன்ன புத்தகங்கள் யாழ். மறைமாவட்டப் புனித யோசேப்பு கத்தோலிக்க அச்சகத்தினால் வெளியிடப்பட்டன. ஆயினும் இந்திய வெளியீடுகளைக் கூடுதலாக (இறக்குமதி வரி கூடுதலாக இருந்தாலும், மலிவாக இருந்தபடியால்.) யாழ். மறைமாவட்டத்தில் பயன்படுத்த இவர் எடுத்த நடவடிக்கை காரணமாகத் திருவழிபாடு மற்றும் நம்பிக்கைச் செயற்பாடுகள் முன்னேறின என்று கூறலாம்.

**திருவிவிலியப் பயன்பாடு**

இக்காலத்தில் திருவிவிலியம் எளிமையான தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவரத் தொடங்கியது. 02ஆம் வத்திக்கான் பொதுச்சங்க மறுமலர்ச்சிக் கேற்ப 1970 டிசம்பர் 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்ற அகில இலங்கை மறைக் கல்வி மாநாட்டின் பரிந்துரையை ஏற்று, பல பிரதிகள் இந்தியாவிலிருந்து பெறப்பட்டது மல்லாமல், யாழ். புனித யோசேப்பு அச்சகமும் சில பகுதிகளை அச்சிட்டது.

(தொடரும்...)

# எதிர் கொள்ளும் தவக்காலம் புனிதமாக அமையட்டும்



**முகவுரை**

நாம் வாழும் இயற்கையில் பருவ காலங்கள் இருப்பது போல எமது கத்தோலிக்கத் திருஅவையிலும் ஆன்மீக வாழ்வுக்கான தயார் படுத்தலுக்காக வழிபாட்டுக்குரிய காலங்கள் கொடுக்கப் பட்டுள்ளன திருவழிபாட்டுக்குரிய ஆண்டுகள் வகுக்கப்பட்டு அதற்குரிய இறைவார்த்தைகள் ஒழுங்காகத் தொகுக்கப்பட்டு நாம் ஆன்மீக வாழ் வில் மேம்பட வேண்டும் என்பதற்காக வும் இறைவார்த்தையின் ஒளியில் வாழ்ந்து அது தருகின்ற மதிப்பீடுகளை யும், விழுமியங்களையும் வாழ்வில் கடைப்பிடித்து இறைமகன் இயேசு வின் இறையாட்சிக் கனவை நனவாக்க சான்று பகர்ந்து உழைக்க வேண்டும் என்று இறைவன் எம்மை அழைத்திருக் கின்றார்.

மனமாற்றத்திற்குரிய இத்தவக்காலத் தில் இயற்கை தன்னைப் புதுப்பிப்பதுபோல நாமும் புதுப்பிக்கப்பட்டு புதுவாழ்வைக் கண்டடையவும் இறைவனோடு எமது உறவைப் புதுப்பித்துப் புனிதப்படுத்தவும் அயலவனோடு ஒப்புரவாகிப் புதுவாழ்வு வாழவும் மாபெரும் கொடையாக மீண்டும் ஒரு தவக்காலம் எமக்குத் தரப்பட்டுள்ளது.

**ஏன் இந்தத் தவக்காலம்**

மனமாற்றத்திற்கான ஒரு உன்னதமான அழைப்பை இத்தவக் காலம் எமக்குத் தருகின்றது. இறை வனின் இரக்கத்தை மாபெரும் அருட் பொழிவாகத் தவக்காலம் எமக்குத் தருவதால் இரக்கத்தின் காலம் என்று அழைக்கின்றோம். வேதாகமத்தின் மையக்கருத்தே இறைவனின் பேரிரக்க மும் அளவற்ற அன்பும் தான். "ஆண்ட வர் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினங்கொள்ளத் தயங்குபவர். பேரன்பு மிக்கவர். நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர். கொடுமையையும் குற்றங்களையும் பாவங்களையும் மன்னிப்பவர் (வி.ப 34:6-7)" என்ற மோசேக்குக் கொடுத்த வாக்குறுதி ஊடாக இறைவ- னின் அன்பையும் பேரிரக்கத்தையும் மன்னிக்கும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்துகின்றார். அதற்குச் சான் றாகத்தான் தன் ஒரே மகனை எமக்காகத் தந்து அவருடைய மரணத்தினூடாக எம்மை மீட்டுள்ளார். அவரின் துன்பம் நிறைந்த பாடுகளைத் தியானிக்கவும் அதன் வழியாக மீட்படைந்து புதுவாழ்வை நாம் கண்டடையவும் தவக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

**வாழ்வில் வெளிப்படுத்துவோம்.**

தவக்காலம் மனமாற்றத்தின் அருளின் காலம் என்பதால் எமது வாழ்க்கை முறைகளின் ஊடாக மற்றவர்களுக்கு அடையாளமாகத் திகழ்வோம். தவக்காலத்திற்குரிய பக்தி முயற்சிகள் பல எமக்குத் தரப்பட்டுள்ளன. காலம்காலமாக நாம் இவற்றை ஒழுங்கு தவறாமல் கடைப்பிடித்து வருகின்றோம். இவற்றைக் கடைப்பிடித்தால் இத்தோடு இத்தவக்கால செயற்பாடுகள் முடிந்துவிட்டன என எம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்கின்றோம். இதற்கு அப்பால் சென்று எமது கடந்தகால வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்கவும் அவற்றை ஆய்வுக்குட்படுத்தி எமது அன்றாட வாழ்வின் முறைமைக- ளிலே புதுமைகாண விழைய வேண்டும் "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்குக் கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16) நாமும் இறைமகன் யேசுவின் உண்மையான திருத்தூ தர்கள் என்ற வகையில் அவருடைய

அளவையூர் அமலன்

சீடத்துவ வாழ்வு எம்மில் இழையோட வாழ்வை முன்னெடுப்போம்.

**சமகால சாட்சிய வாழ்வு**

தவக்காலம் இறையன்பு வெளிப்படும் மிக உன்னதமான காலம் இறைவனின் மாபெரும் கொடையான அன்பையும் இரக்கத்தையும் நாம் அனுபவிக்கும் சுவைக்கும் காலம் "கடவுள் அன்பாய் இருக்கின்றார் (1யோவான் 4:8) "இவ்வன்பு தூய ஆவியால் நம்மீது பொழியப்படுகின்றது." (உரோ 5:5) மனிதர் எம்மோடு வாழ்வோரின் எல்லாத்துன்பங்களையும் முழுமையாக இல்லாமல் செய்வதுதான் இறையன்பு. சமகாலச் சூழ் நிலையிலே பல்வேறு விதமான நெருக்கடிகளால் துன்புறும் மக்கள் எமது உறவுக்குள்ளும் நாம் வாழும் சூழலிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை நாம் இரக்கத்தோடும் அன்போடும் நோக்குவதும் தவக்காலத்தின் ஒரு முக்கிய செயற்பாடாக அமைய வேண் டும். எமது வாழ்வில் நாம் கடைப்பிடிக் கும் ஒறுத்தல் முயற்சிகளை முறை யாக இம்முறையும் கடைப்பிடிப்போம். இம்முயற்சி வழியாக நாம் சேகரிக்கும் பணத்தையும் பொருட்களையும் தேவையில் இருப்போரோடு பகிர்ந்து கொள்வோம். பகிர்தல் வாழ்வு தவக் காலத்திற்குரியது என்பதை உணர்ந்து பாராமுகமாய் இராமல் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் அனை- வரும் உய்த்துணர எமது சாட்சிய வாழ்வை முன்னெடுப்போம்.

**நிறைவாக**

தவக்காலம் மிக அண்மையில் இருக்கின்றது. மாசி மாதம் 22ம் திகதி விபூதிப்புதனோடு ஆரம்பமாகின்றது. அன்று எமது நெற்றியில் பூசும் சாம் பலின் அர்த்தத்தைப் புரிந்து வாழ முற்படு வோம். இவ்வுலக வாழ்வு நிலையற்றது என்பதையும் காலையில் மலர்ந்து மாலை யில் உதிரும் மலருக்கு சமமானது என்பதையும் ஞானத்தோடு புரிந்து கொள்வோம். திருஅவையால் எமக்கு மாபெரும் கொடையாகவும் மனமாற்றத்தின் காலமாகவும் தரப்படும் மிக உன்னதமான அருளின் காலம் என்பதை ஏற்றுக் கொள்வோம். "இதுவே தகுந்த காலம் இன்றே மீட்பு நாள் (2கொரி 6:2) என்பதைப் புனித பவுல் எங்களுக்கு வலியுறுத்துகின்றார். தவக்காலத்தின் முக்கிய மூன்று செயற்பாடுகளான தவம், செபம், தானம் என்பவற்றைக் கடைப்பிடித்து எம்மைப் புதுப்பிக்கப் புனிதப்படுத்த இறையருள் வேண்டுவோம்.

# புன்னகைப் பூக்கள்



**வெ**ல்ல முடியாத மனங் களையும் வேதனையோடு சங்கமித்துக் கொண்டிருக் கும் சோதனை மிக்கவர்க ளையும் வெல்வதற்கு உலகில் புன்னகையை விடச் சிறந்த ஔடதம் கிடைக்கவே கிடைக்காது.

"மகிழ்ச்சியோடு சுமந்தால் எந்தப் பாரமும் குறைவாக இருக்கும். கவலை தமது சவப்பெட்டியில் ஓர் ஆணியை அறைகின்றது. இன்பமாகச் சிரிக்கும் ஒவ்வொரு சிரிப்பும் அந்த ஆணியைக் கழற்றுகின்றது என் கின்றார் எழுத்தாளர் இ. எஸ். மெர் வின். ஒரு சிலர் மட்டும் சிரித்து வாழ மற்றவர்கள் அழவேண்டும் என்பது இயற்கை நியதியல்ல. நகைச்சுவை யுடன் நாளாந்தம் இன்புற்று மகிழ்வதோ அன்றேல் அன்றாடம் அழுமூஞ்சியுடன் காணப்படுவதோ ஒவ்வொருவரதும் சுயமுயற்சியில் தங்கியுள்ளது.

செருப்பு இல்லை என்று ஒருவன் அழுதானாம். காலில்லாதவனைக் கண்ட பின்பு தன் மடமையைக் கண்டு சிரித்தானாம். நகைச்சுவையாக வாழக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தும் பலர் சிரிக்க மறுக்கின்றார்கள். எப்படி யாவது ஒரு குறையைக் கண்டுபிடித்து வருந்துகின்றார்கள். இன்னும் வேறு சிலர் தாமும் சிரித்து வாழமாட்டார்கள்; பிறரையும் சிரித்து வாழ விடமாட்டார் கள். இவர்கள் பொல்லாத பேர்வழிகள்; மற்றவர்களது அழுகையினையும் வருத் தத்தையும் கண்டு மகிழ்வுறுபவர்கள். இவர்களது இத்தகைய வெளிப்பாடுகள் உளப் பிறழ்வு நிலையையே வெளிப் படுத்துகின்றது என்பது உளவியலாளரின் கருத்தாகும்.

"ஒரு பெண்ணை அழகு செய்வது அவளது நவீன உடையல்ல. ஆனால் அவளது முகத்தில் தோன்றும் புன்முறு வலே" என்று புன்முறுவலின் மகத்து வத்தை உறுதிப்படுத்துகின்றார் டேல் கார்னீஜீ.

அக அழகை வெளிப்படுத்துகின்ற முக அழகின், காரணத்தினால் சிலரைக் கண்டதும் எமக்கு உடனே பிடித்து விடு கின்றது. அவர்களுடன் இன்னும் கொஞ் சம் கூடக் கதைக்கவேண்டும்போல் தோன்றுகின்றது.அவர்களது ஆரோக்கி யமான ஆளுமை அவர்களின் பால் எம்மை வசியப்படுத்துகின்றது. அவர்களது குரலை அடிக்கடி கேட்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.பழைய உறவுகளைப் புதுப்பிக்கவும் உறவு- களைத் தோற்றுவிக்கவும் புன்னகை உதவி புரிகின்றது. சின்னஞ் சிறுசுகளின் கள்ளம், கபடமற்ற புன்னகை போன்று நல்ல மனம் படைத்தோரின் புன்னகை புனிதமானதாய்க் காணப்படும். எளியோ ரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும் அவலங்களும் உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் முரண்பாட்டுத் தரிசனங் களும் "சிரிப்பது போலே முகம் இருக்கும், சிரிப்புக்குள் நாகம் மறைந்திருக்கும்" போலித் தோற்றப்பாடுகளும் களங்கமற்ற புன்னகையில் காணப்பட மாட்டாது.

கொழும்பு நகரில் பிரசித்தி பெற்ற கம்பனி ஒன்றில் நடைபெற்ற சம்பவம் இது. கம்பனி முகாமையாளரைத் திணற வைத்தது. அவர் கணக்காளர்களை வரவழைத்து கம்பனியின் விற்பனை

அருட்பணி வின்சன் பற்றிக்

வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டு பிடிக்குமாறு பணித்தாராம். அக்கம்பனி யின் வாடிக்கையாளர்கள் நாளாந்தம் குறைந்துகொண்டு போவதே இவ் வீழ்ச் சிக்குக் காரணமாகும் என்ற முடிவுக்கு வந்தனர். இதையறிந்த கம்பனி முகாமை யாளர் வியாபாரத்துறை உளவியலாளர் களில் ஒருவரை அழைத்துக் கார ணத்தை விளக்கும்படி கூறவே, அவர் அதற்குக் கம்பனியின் விற்பனையாளர் கள் மத்தியில் புன்முறுவல்கொண்ட வரவேற்பு முகம் வாடிக்கையாளரை வரவேற்கத் தவறுவதே காரணம்" என்றார்.

"புன்முறுவல் புரியத் தெரியாதோர் வியாபாரத்தில் மட்டுமல்ல மனித வாழ்க் கையிலும் வெற்றி பெற உறவுகளில் உச்சப் பயன் பெற புன்னகை பூத்த முகத் தினை மலரவிடுவது அவசியமாகும். பிறரோடு சேர்ந்து சிரித்து வாழ்வதும், பிறரது சிரிப்புப்பொருளாக மாறாதிருப் பதும், மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். சிரித்து வாழ வேண்டும் என்றால் எந்த நேரமும் பல்லிளித்து வாழவேண்டுமென்று அர்த்தமல்ல.

இத்தகைய சிரிப்பு போலிச் சிரிப்பாக அமையலாம். அகந்தைச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்புப் போன்றவை ஆரோக்கியமான சிரிப்புக்கு முரணானவை. உள்ளத்தில் இருந்து உருவாகு வதும் தூய உறவின் போது வெளிப்படுவதுமான நேர்மையான சிரிப்பே உளச் சமநிலை- யினை நிர்ணயிப்பதற்கு உதவும். டாக்டர் சிங் என்பவர் சிரிப்பு உளவியல- ில் சில ஆராய்ச்சிகளை நடத்தி சில உண்மைகளைக் கண்டறிந்தார். ஒன் றாகச் சிரிக்கும் மக்கள் அதிக ஆக்கச் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை அவதானித் தார். ஏறக்குறைய 14 மாணவர்கள் இருந்த வகுப்பறையில் இஸ்ராயேலரின் நகைச்சுவைப் படம் ஒன்று திரையிடப்பட் டது. வகுப்பறைக்கு வெளியே இருந் தோரும் சிரித்ததால் சிரித்தோரின் தொகை 35 ஆகியது. அப்படிச் சிரித்த மாணவர் கள் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றனர். இவரது ஆய்வின்படி சிரிப்பு மனிதனை இயக்கும் ஓர் இயந்திரம் போன்றதாகும்.

**சிரித்து வாழ்ந்திட, புன்னகை பூத்த முகத்தோடு நாள்தோறும் மகிழ்வுற்று விளங்க,**

- சிறந்தவற்றைச் சிந்திப்போம்.
- மறந்தவற்றை நினைந்திடுவோம்.
- தரமானவற்றைச் சுவைத்திடுவோம்.
- துயரமானவற்றைச் மறந்திடுவோம்.
- எளிமையாக வாழ்ந்திடுவோம்.
- ஏமாறாமல் விழித்திடுவோம்.
- அன்பினைப் பருகிடுவோம்.
- ஆனந்தத்தில் மிதந்திடுவோம்.

(தொடரும்...)

# காவலன் கலசம்

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)**
**கோயம்புத்தூரில் மறைபணியாளராகப் பணி**

**அமலமரித்தியாகிகள் சபையினர் இலங்கையில் முன்னெடுத்த முதல் பங்கு மகாஞானொடுக்கம்**

அமலமரித்தியாகியாகப் பணி

திருகோணமலையில் இடம்பெற்ற மகா ஞானொடுக்கத்தின் இறுதி நிகழ்வின் போதுதான் பொன்ஜீன் அடிகள் தமது நவசந்நியாச வருடத்தை நிறைவு செய்து அமலமரித்தியாகியாகத் தமது நித்திய அர்ப்பண வாக்குத்தத்தத்தை ஆயர் செமே ரியா, அருட்பணியாளர் கீற்றீங், சோர்ணாவெல், பூஸ்சாக் ஆகியோர் முன்னிலையில் 1858ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி எடுத்துக்கொண்டார். அமலமரித்தியாகியாகியபின் பொன்ஜீன் அடிகள் திருத்தூது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற மகா ஞானொடுக்கங்களில் முழு மூச்சுடன் போதனையில் ஈடுபட்டமையால் அவருக்குச்சற்று ஓய்வு தேவைப்பட்டது. இவரது ஆற்றல்களையும் பல்வேறு திறமைகளையும் பற்றி நன்கு அறிந்திருந்த ஆயர் செமேரியா ஆண்டகை திருத்தூது மாவட்டத்தில் பல்வேறு சில முக்கிய பணிகளில் இவரை ஈடுபடுத்தலானார். அவைதான் புதிய பாடசாலைகளை ஏற்படுத்தி அவற்றை மேற்பார்வை செய்வது, பெற்றோரை இழந்த சிறுவர்களை வைத்துப் பராமரிப்பதற்கும்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

நிர்வகிப்பதற்கும் காப்பகங்களை ஏற்படுத்துவது, சுதேச இளைஞர்கள், இளம் பெண்களுக்காகத் துற வறசபைகளை ஏற்படுத்தி இங்குள்ள அருட்சகோதரர், அருட்சகோதரிகளுக்கு நவசந்நியாச இயக்குநராகவும் அவர்களது ஆன்மீகக் குருவாக இருந்து ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவராகவும், புதிதாக வந்து சேரும் மறைபணியாளருக்குத் தமிழ் மொழி பயிற்றுவிக்கவும், திருப்பாலத்துவசபை, நற்செய்தி அறிவிப்புச்சபை ஆகியவற்றின் இயக்குனராக இருக்கவும், திருத்தூது மாவட்டத்தின் பெரும் பிரச்சினையாகவும் இடறலாகவுமிருந்துவந்த கோவாப்பிரிவினைக்கெதிராகச் செயற்பட்டு அதில் ஈடுபட்டுள்ளவர்களைத்திருஅவையுடன் ஒற்றுமைப்படுத்தவும், நடைமுறையில் கத்தோலிக்கருக்கெதிராக உள்ள திருமணச் சட்டங்களின் அநீதித்தன்மையை எழுத்து மூலம் வெளிக்கொணரவும், நடைமுறையில் கத்தோலிக்க பிள்ளைகளுக்குக் கத்தோலிக்க முறைப்படி கல்வி புகட்டுவதில் உள்ள சட்டச்சிக்கல்களை எதிர்த்துப் போராடவும், கத்தோலிக்கர் சார்பில் அரச அலுவலர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு தீர்வுகளைக் கண்டறிய கத்தோலிக்க மக்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாகவும் செயற்படுவது போன்ற பணிகளை ஆற்றுவதற்கும் ஆன பல்வேறு பணிகளை இவரிடம் ஒப்படைத்தார். இவ்வாறாக ஆயர் செமேரியாவின் பல்வேறு பணிகளில் அவரது வலது கரமாக இருந்து பொன்ஜீன் அடிகள் செயற்பட்டார்.

தொடர்ந்து 1859ம் ஆண்டு யாழ்ப்பாண நகரப்பகுதியில் இடம் பெற்ற மகா ஞானொடுக்கத்தின் நிறைவில் பல பிற சமயத்தவர்கள் இறையருளால் உந்தப்பட்டு கத்தோலிக்க திருமறையில் சேர விரும்பினர். இவர்களுள் தொடர்ந்து 1859ம் ஆண்டு யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் இடம் பெற்ற மகா ஞானொடுக்கத்தின் நிறைவில் பல பிறசமயத்தவர்கள் இறையருளால் உந்தப்பட்டு கத்தோலிக்கதிருமறையில் சேர விரும்பினர் இவர்களுள் பலர் இளைஞர், இளம் பெண்கள். எனவே இவர்களுக்கு கத்தோலிக்க திருமறையில் சேரத்தேவையான இறை நம்பிக்கையையும், அதன் மீதுள்ள பிடிமானத்தையும் பேணுவதற்கான ஒரு அவசரத்தேவை உணரப்பட்டது. இதற்குத் திருப்பாலத்துவ சபையானது ஒரு அரவணைக்கும் தாய்போல இருந்து செயற்பட்டது. எனலாம். 1860ம் ஆண்டு இவ்வாறு வரும் இளைஞர்களைப்பொறுப்பேற்க திருமதி ஒ ப்ளனகன் பெண்பிள்ளைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்வாறாக யாழ்பாணத்தில் ஆண்பிள்ளைகளுக்கு ஒரு காப்பகம், பெண்பிள்ளைகளுக்குப்பிறிதொரு காப்பகமும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் ஆரம்பம் மிகவும் எளிமையானதாகத்தானிருந்தது சிறு சிறு கொட்டில்கள் தென்னோலையால் வேயப்பட்டு அமைக்கப்பட்டன. சில பெரியவர்களின் உதவியுடன் இச்சிறுவர்கள் தான் இக்கொட்டில்களை அமைப்பதில் ஈடுபட்டனர். வகுக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நாள் முழுவதும் செபம், படிப்பு, வேலை மற்றும் சில பொழுதுபோக்கு அம்சங்களுக்காகவென ஒழுங்கமைக்கப்பட்டது. பொன்ஜீன் அடிகள் சிறு சிறு வேலைகளை அல்லது கைத்தொழில்களை அவர்களுக்கென அறிமுகப்படுத்தினார் அவை செபமாலை செய்தல், மெழுகுவர்த்திகள் செய்தல், புத்தகம் கட்டுதல், சுருட்டுச் செய்தல் மற்றும் தோட்டவேலை போன்றவை அவற்றுள் சிலவாகும். இக்கைப்பணிகள் அந்தச் சிறுவர்களுக்குக் காப்பகத் தாபரிப்புக்கும் கணிசமானளவு உதவியாகவிருந்தன. படிப்படியாக இச்சிறுவர்களுடைய பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், வாழ்க்கைமுறை சிலவற்றில் கணிச மான முன்னேற்றத்தை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. இச்சிறுவர்கள் திருமுழுக்கு, முதல்நன்மை பெறும் நாட்களும் பொன்ஜீன் அடிகளுக்கு மிகவும் மகிழ்ச்சியான நாட்களாயிருந்தன. தொடர்ந்து 1862ம் ஆண்டு அமல மரித்தியாகிகள் சபையினரின் நவசந்நியாச சகோதரர்களின் இயக்குநராகவும் நியமனம் பெற்றார்.

(தொடரும்...)

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**நான்காம் கட்டளை**

**229.எமது பெற்றோருக்கு மாத்திரமா நாங்கள் கீழ்ப் படியக் கட்டளையிடப்படுகின்றோம்?**

எமது பெற்றோருக்கு மாத்திரம் அல்ல எமது ஆயர்களுக்கும், ஆன்ம மேய்ப்பர்களுக்கும், சமூக அதிகாரிகளுக்கும், சட்டபூர்வ மேலாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நாங்கள் கீழ்ப்படிய கட்டளையிடப்படுகின்றோம்.

**230.எமது பெற்றோரது தேவைகளில் உதவிசெய்ய நாம் கடமைப்படுகின்றோமா?**

ஆம். நாங்கள் எமது பெற்றோருடைய ஆன்ம உலகியல் தேவைகளில் அவர்களுக்கு உதவி செய்ய நாங்கள் கடமைப்படுகின்றோம்.

**231.எமது ஆன்ம மேய்ப்பர்களுக்கு உதவிசெய்வதற்கு நீதியின் நிமித்தம் நாம் கடமைப்படுகின்றோமா?**

நாங்கள் எமது ஆன்ம மேய்ப்பர்களுக்கு உதவி செய்ய நீதியின் நிமித்தம் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார்: "நற்செய்தியை அறிவிக்கிறவர்கள் அந்நற்செய்தியின் மூலமாகவே பிழைப்பிற்குரியவற்றை பெற்றுக் கொள்ள வேண்டு மென்று நம் ஆண்டவர் பணித்துள்ளார்" (1கொரி:14).

**232.தங்கள் பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள் எவை?**

தமது பிள்ளைகளிற்குப் பெற்றோர் தேவையானவற்றை வழங்குதல், நெறிப்படுத்தல், திருத்துதல், நல்ல கத்தோலிக்க கல்வியறிவை, ஒழுக்க வாழ்வை வழங்கக் கடமைப்பட்டுள்ளனர்.

**233. மேலாளர்கள் துறவறமடங்களின் தலைவர்கள் தலைவிகளின் கடமை என்ன?**

தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் நேரிய தேவைகளை நிறைவேற்றித் தமது துறவற கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு உதவியாக இருப்பது மேலாளர்கள் துறவறமடத் தலைவர்கள் தலைவியர்களின் கடமையாக இருக்கின்றது.

**234.எவற்றை நான்காம் கட்டளை தடைசெய்கிறது?**

அனைத்து அவமதிப்புக்கள், பிடிவாதக் குணங்கள், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் சட்டபூர்வ மேலாளர்கள் போன்ற வர்களுக்கும் கீழ்ப்படியாமை போன்றவற்றை நான்காம் கட்டளை தடைசெய்கின்றது.

**235. இரகசிய அமைப்புகளில் சேர்ந்திருப்பது பாவமா?**

திரு அவை, நாடு, ஏதாவதொரு சமூக அமைப்புக் கெதிராகச் சதிசெய்யக்கூடிய இரகசிய அமைப்புக்கள் போன்றவற்றில் சேர்ந்திருப்பது பாவமாகும். இதையே புனித பவுல் பின்வருமாறு கூறுகின்றார்: "ஆளும் அதிகாரம் உள்ளவர்களிற்கு எல்லாரும் பணிந்திருங்கள். ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதி காரம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப் பொறுப்புக்களைக் கடவுளே ஏற்படுத்தினார். ஆகையால் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர். அவ்வாறு எதிர்ப்பவர்கள் தங்கள் மீது தண்டனைத் தீர்ப்பை தாங்களே வருவித்துக் கொள்கிறார்கள். (உரோமையர் 13:1-2).


(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

20

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**அத்தியாயம் 9**
**சமாளிக்கும் கிறிஸ்தவத்தைப் புதுப்பிக்கத் தமிழ் விடுதலை இறையியல் தோன்ற வேண்டும்**
**9.2 2ஆம் வத். சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.**

தென் அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் ஆலயத்திலும், வழிபாட்டிலும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றி விட்டு, சமூக அநீதிகள், வறுமை, ஒடுக்கு முறைகளிலே, துன்பத்தை அனுபவிக்கும் மக்களையிட்டுக் கரிசனையில்லாத போக்கை, சமாளிக்கும் கிறிஸ்தவத்தை நீண்ட காலம் தமிழ் மக்களைப் போல் ஏற்றுக் கொள்ளவில்லை.

மக்களின் துன்பம் நிறைந்த வாழ்வின் மத்தியில், தென் அமெரிக்கத் திரு அவைகள் கிறிஸ்துவின் ஒரு சபையாக இருப்பது, மிகவும் கடினமான சவாலாக இருந்தது. அங்கே இருந்து செயற்பட்ட குருக்கள், துறவிகள், தங்களுடைய திருச்சபையின் வாழ்விற்கும், தங்களைச் சூழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வுக்கும் இடையில் பெரிய முரண்பாடுகளைக் கண்டார்கள். மௌனமாய் இருப்பது கடினமாயிற்று. ஆகையினால்தான் இந்தக் கண்டத்தின் திருஅவைத் தலைவர்கள், குருக்கள், ஆயர்கள், மக்களின் நிலைமைகளை உணர்ந்தவர்களாக, உணர்ச்சிவசப்பட்டு விழித்தெழுந்தார்கள். மக்களுக்காகக் குரல் கொடுக்கத் திருச்சபையிலே ஒரு புரட்சியை ஆரம்பித்தனர். இதற்கு உறுதுணையாக இரண்டு நிகழ்வுகள் நடந்தேறின.

1955ஆம் ஆண்டு தென் இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் ஒன்றாகக் கூடித் தங்களுக்குள்ளே ஒரு ஆயர் சபையை உருவாக்கினர் (CELAM). இச்செயல் பல நூற்றாண்டுகளாக, திருஅவையை பற்றிய எல்லாத் தீர்மானங்களுக்கும் உரோமைத் தலைமை பீடத்தில் தங்கி இருப்பதைக் குறைத்தது. அதேநேரத்திலே அங்கே இருந்த குருக்களும் துறவிகளும் நிலைமையை உணர்ந்தவர்களாக அங்கே நடக்கும் அநீதிகள், வன்முறைகள், அடிமைத்தனங்கள், இவைகளுக்கு எதிராகக் குரல் எழுப்ப முன்வந்தனர்.

பேரு நாட்டைச் சேர்ந்த குஸ்ரவோ குட்டியெறஸ் (Gustavo Guttierez, Peru), லெயனோடா குலொவிஸ் பொவ் சகோதரர்கள் (Leonardo & Clodvis Boff brothers) நாட்டின் சுதேச இறையியலாளராக, மௌனமாயிருந்த திருஅவையை மெல்ல மெல்ல விழித்தெழச் செய்து, துன்பப்படும் மக்களின் சார்பாக, வறுமையில் உறைந்த, அநீதி அனுபவிக்கும், ஒடுக்கப்பட்ட, வன்முறைகளுக்கு ஆளான மக்கள் சார்பாகக் குரல்கொடுக்கத் தொடங்கினார்கள். இது அவர்களின் திரு அவையிலே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

இப்படித் திருஅவைத் தலைவர்கள், மக்கள் சார்பிலே குரல்கொடுத்து புரட்சியை ஏற்படுத்துவதை, உரோமன் திருஅவையின் தலைமைப்பீடம் ஏற்று கொள்ளவில்லை. சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, மிகவும் வேதனையைக் கொடுத்தது.

ஏனென்றால் உரோமைத் திருச்சபையின் கணிப்பின்படி, தென் அமெரிக்காவில் உள்ள திருஅவைகள் காலனித்துவ காலம் தொட்டு, பரம்பரையாகப் பழப்பித்து வந்த இறையியலைக் கைவிட்டு விட்டனர் என்றும், மக்கள் மத்தியில் இருக்கும் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு, மாக்சிய புரட்சி வழிகளைக் கையாளுகின்றனர் என்றும் குற்றம் சாட்டினர். ஆனால் உண்மையில் மக்கள் அதே இறைவனைத்தான் மீண்டும் தமது சூழலில் விடுதலை அளிக்கும், இரட்சணியம் கொடுக்கும், இறைவனாக ஏற்றுக் கொண்டனர்.

(தொடரும்...)

## தவக்காலத்திற்கான...

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

**சிலுவைப்பாதை**

தவக்காலங்களில் நாம் செய்யும் சிலுவைப்பாதை எமது கத்தோலிக் திரு அவையின் ஆன்மீகப் பாரம்பரியங்களின் பக்தி முயற்சியாகிறது. இறைமகன் இயேசுவின் சிலுவைப் பாடுகளைச் சிந்திப்பது மட்டுமல்ல, எமது அன்றாட வாழ்வில் ஏற்படும் துன்பங்களை கல்வாரிப் பாதையில் ஒன்றினைய முயற்சிப்போம்.

**வானவர் கீதம் - (அல்லேலூயா)**

தவக்காலத்தில் மகிழ்ச்சியான உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக வானவர் கீதமும், ஆர்ப்பரித்து முழுங்கப்படும் அல்லேலூயாவும் திருப்பலியில் பயன்படுத்துவதில்லை.

**ஊதா நிற உடைகள்**

எமது இதயங்கள் இயேசுவின் துயரங்களை ஆழ்ந்து தியானித்து நாம் மாற்றம் பெறப் பயன்படும் நினைவூட்டலின் அடையாளம். ஊதா நிற உடைகள் துக்க நாட்களுக் குரியவை என திருஅவையால் கடைப்பிடிக்கப்படுகின்றது.


## விண்ணக வாழ்வில் 31 ம் நாள்

மண்ணில் 24 . 04 . 1935



விண்ணில் 17 . 01 . 2023

### திருமதி ஞானம்மா தொம்மையப்பு

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

அன்பைப் பொழிந்த இதயமாய்
கல்வியைக் காட்டிய கண்களாய்
நல்வழி நடத்திய கால்களாய்
துணைக்கரம் நீட்டிய கைகளாய்
எம் வாழ்வோடு கலந்திட்ட மம்மி
பேரின்பம் பெற்று நித்தியமாய் வாழ்திடுவீர்!

எம் அன்னையின் இழப்பின் போது துயர் பகிர்ந்து அவரின் நித்திய வாழ்வுக்காக செபித்த யாழ். ஆயர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி குழுமத்தினர், குருக்கள், துறவிகள், பங்கு மக்கள் மற்றும் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எம் தாழ்மையான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

'திரு இருதய வாசம்'
5ம் வட்டாரம், இரணைப்பாலை.

AD-13

அன்புடன்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 12 . 1953



இறப்பு 17 . 02 . 2022

### அமரர் மார்சலின்பிள்ளை தோமஸ் சுபேந்திரன்

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"

ஆண்டவன் இயேசுவின் அடியவனாய்
அகமகிழ்ந்து எம்மோடு வாழ்ந்து
பற்றோடும் பாசத்தோடும் எம்மை
பரிவின் கரங்களால் அரவணைத்து
துன்பங்கள் துயரங்கள் மத்தியிலும்
துவண்டிடாமல் செபத்தில் நிலைத்து
இறைபதம் அடைந்த அன்புறவே
நிலை வாழ்வை நீர் மகிழ்ந்திட
இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

17.02.2023 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தெனியம்பை வீதி,
வல்வெட்டித்துறை

AD 14

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## நினைவழியா நிலைவலைகள்....

**2ம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 01 . 11 . 1930



விண்ணில் 29 . 01 . 2021

அமரர் பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா

**1ம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 16 . 04 . 1940



விண்ணில் 17 . 02 . 2022

அமரர் பிலோமினா எட்வேட்ராஜா

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

என்றும் எம்முள் வாழும் அப்பா! அம்மா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஓடினாலும்
எம்மையெல்லாம் அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
அரவணைத்து வழிநடத்திய அந்த நாட்கள்!
உங்கள் அறிவுரைகள், அரவணைப்புகள்
பாச நினைவுகள் என்றும் எங்கள் நெங்சங்களில்
நிழலாகத் தொடர்ந்து உயிர்வாழும்!
அப்பா, அம்மா
உங்கள் ஆன்மா இறைவனின் அமைதியில்
இளைப்பாற நித்தமும் வேண்டுகின்றோம்.

AD-15

பிள்ளைகள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 06 . 1939



மறைவு 30 . 01 . 2019

அமரர்

### திருமதி அன்ரனெற் றோஸ்மலர் வேதநாயகம் (மணி)

" அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்;
ஏனெனில் அவர்களின் செயல்கள்
அவர்களைப் பின் தொடரும்"
(தி.வெ.14 :13)

AD 11

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 3ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 24 . 08 . 1959



விண்ணில் 22 . 02 . 2020

அமரர்

### ஷிவோன் நாளினி ரவீந்திரன்

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

AD-10

குடும்பத்தினர்

# சட்டத்தரணி றெமிடியஸ் காலமானார்



முதுநிலை குற்றவியல் சட்டஅறிஞர் முடியப்பு றெமிடியஸ் அவர்கள் கடந்த 08ம் திகதி வீதி விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் கடந்த 11ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அமரர் முடியப்பு றெமிடியஸ் அவர்கள் யாழ். திரு அவையில் ஓர் சிறந்த பொதுநிலை நம்பிக்கையாளராகவும் கத்தோலிக்கச் சட்டத்தரணிகள் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் ஆவார்.

"கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளிலிருப்போரை சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்" எனும் எசாயா இறைவாக்கினரின் இறைவார்த்தைக்கமைய தமிழ் மக்களை அன்புசெய்து மக்களோடு தம்மை இணைத்து பணிசெய்த வழக்கறிஞரின் இவ்விழப்பு யாழ். திருஅவைக்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற செபிப்பதுடன், இழப்பில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மறையாசிரியர் வதிவிடப் பயிற்சி ஆரம்பம்



யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மறையாசிரியர்களுக்கான ஒரு மாதகால வதிவிடப்பயிற்சி கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டத்தின் வெவ்வேறு பங்குகளிலிருந்து 23வரையான மறையாசிரியர்கள் கலந்து பயிற்சி பெற்றுவருகின்றனர்.

# கிளி. மறைக்கல்வி மாணவர்களின் களப்பயணம்



கிளிநொச்சிப் பங்கில் மறைக்கல்வி மாணவர்களால் முன்னெடுக்கபட்ட கள அனுபவச் சுற்றுலாப் பயணம் கடந்த 07ஆம் திகதி இடம்பெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்டர்தாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு யாழ் நகரில் அமைந்துள்ள மறைநதி கத்தோலிக்க ஊடக மையம், மறைக்கல்வி நடுநிலையம், புனித மடுத்தீனார் சிறிய குருமடம், பேராலயம், கோட்டை, சாட்டி போன்ற இடங்களைப் பார்வையிட்டனர். இக்கள அனுபவப் பயணத்தில் 120வரையான மாணவர்களும் 10ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.

# சங்கானை புனித சலேசியார் திருவிழா



சில்லாலைப் பங்கிலுள்ள சங்கானை புனித சலேசியார் ஆலய வருடாந்தத் திருவிழா அண்மையில் நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை அருட்பணி ஜீவாபோல் அடிகள் தலைமை தாங்கி நிறைவேற்றினார். பங்குத்தந்தை அருட்தந்தை பிறையன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்தன.

# கலைத்தூது அழகியல் கல்லூரியில் பரிசளிப்பு விழா



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் முன்னெடுக்கபட்ட பரிசளிப்பு விழா கடந்த 05 ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப உளவளத்துணை நிலைய இயக்குநர் அருட்தந்தை டேவிட் அடிகளும் கலந்து சிறப்பித்தனர். கனடா திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பும், ஆசிரியர்கள் கௌரவிப்பும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# இளவாலை புனித யூதாததேயு ஆலய பீடப்பணியாளர்கள் ஒன்றுகூடல்



இளவாலை புனித யூதாததேயு ஆலயப் பீடப்பணியாளர்கள் தமது சபையின் பாதுகாவலரலான புனித டொன் பொஸ்கோவின் திருநாளில் முன்னெடுத்த சிறப்பு நிகழ்வு கடந்த 05ஆம் திகதி நடைபெற்றது.

அன்றைய தினம் காலைத் திருப்பலியும் தொடர்ந்து மாலை பீடப்பணியாளர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வும் பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அடிகளின் தலைமையில் இடம்பெற்றது.

# அறிவியல் நகரில் சிரமதானம்



கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக வளாகத்தின் சிற்றாலயச் சூழலில் முன்னெடுக்கப்பட்ட சிரமதான நிகழ்வு கடந்த 05ஆம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சிப் பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்டர்தாஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் கிளிநொச்சிப் பங்கு இளையோர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து சிற்றாலய வளாகத்தைத் துப்பரவு செய்தனர்.

# உருத்திரபுரப் பங்கில் மறைக்கல்வித் தினம்



கிளிநொச்சி உருத்திரபுரம் பங்கிலுள்ள மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை போல் அனக்கிளிற் அடிகளின் ஏற்பாட்டில் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை யேம்ஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புத்திருப்பலியும் தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான கருத்தரங்குகளும் குழு விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

# குளமங்கால் இளையோர்களுக்கான கருத்தமர்வு



குளமங்கால் பங்கு இளையோர்களுக்கான கருத்தரங்கும் தலைமைத்துவப் பயிற்சியும் யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் சந்திப்பும் சாட்டியில் 12.02.2023 ஞாயிறு நடைபெற்றது. இதில் 92 இளையோர்கள் பங்கெடுத்திருந்தார்கள். யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளாருடன் அவரது வளவாளர்கள் தலைமைத்துவப் பட்டறையை முன்னெடுத்திருந்தார்கள். காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை இந்நிகழ்வு சாட்டியில் சிறப்பாக நடைபெற்றிருந்தது.

# குருநகர் புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தின் கலைவிழா



குருநகர் புனித யாகப்பர் ஆலய புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தின் 30வது ஆண்டை முன்னிட்டு 21.01.2023 அன்று கலைவிழா நடைபெற்றது.

குருநகர் கலை அரங்கில் மன்றத்தின் தலைவர் செல்வன் விக்ரர் குமார் சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக விழிப்புணர்வுப் பட்டிமன்றம், அருகிவரும் கிராமியக் கலையாகிய அம்பா பாடல், சமூகத்தில் சர்வதேச ரீதியில் சாதனை புரிந்த மண்ணின் மகள் மற்றும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் முதல் முறையாக இளம் கலைஞர்களால் மேடையேற்றப்பட்ட வீரன் தாவீது வடமோடி நாட்டுக்கூத்து என்பன மேடையேற்றப்பட்டது.

# மாணவர்களுக்கான விடுமுறைக்கால ஒன்றுகூடல்



புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான மூன்று நாள் சிறப்பு நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை எட்வின் நரேஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 13ம் திகதி வரை நடைபெற்ற இந்நிகிழ்வில் திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் வளவாளர்களாக இணைந்து ஆங்கிலக் கல்வி மற்றும் பாடல் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கியிருந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.